முச்சந்தி முரளி



"தீர்மானங்களை மட்டும் குறைவில்லாமல் எடுக்கினம். ஆனால் அதை செய்யவைக்கினமில்லையே"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 319

வியாழக்கிழமை
10 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது!



கொழும்பு, ஒக். 10

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் நேற்று வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் கடந்த சில வாரங்களாக நடைபெற்று நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது. இலங்கையில் தற்போது தேர்தல் காலம் என்பதால், இலங்கை மீதான முன்னைய தீர்மானத்தை மீளவும் வாக்கெடுப்புக்கு எடுக்காது, அதை மீண்டும் புதுப்பித்து வாக்கெடுப்பு இன்றி நடைமுறைப்படுத்த இணையனுசரணை நாடுகள் திட்டமிட்டிருந்தன.

இதன் அடிப்படை ☞ 11

### அரச காணிகள் மோசடி:

## அதிகாரிகளுக்கு இடமாற்றம் தண்டனையாக அமையாது

### கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் வடக்கு ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 10

வடக்கு மாகாணத்தில் அரச காணிகளை வழங்கும்போது மோசடியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை இடமாற்றினால் மாத்திரம் போதாது. அவர்களுக்கு மிகக் ☞ 11

## காணிப் பிரச்சினைகளை ஆராய்வதற்கு தனிக்குழு

யாழ்ப்பாணம், ஒக். 10

வடமாகாணத்தில் நிலவும் காணிப்பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு தனிக்குழுவை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ☞ 11

## ரயில் மோதி ஒருவர் பலி!

யாழ்., ஒக். 10

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் ரயில் மோதி குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பகுதியைச் சேர்ந்த ☞ 11

# மன்னாரிப் புதைகுழி அகழ்வு ஆரம்பம்!

மன்னார், ஒக்ரோபர் 10

நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, சதொச மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் இந்தவாரம் இடம்பெறவுள்ள நிலையில், இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றுள்ளன. ☞ 11

## வறுமையால் மாணவர்களின் இடைவிலகல்கள் அதிகரிப்பு

### பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

வறுமை காரணமாக பலநூறு மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வியைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி தெரிவித்துள்ளார். ☞ 11

## வடக்கில் இம்முறை அதிக சுயேச்சைகள்

யாழ்ப்பாணம், ஒக். 10

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில், இம்முறை அதிக சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடும் மாகாணமாக ☞ 11

## 21 இந்திய மீனவர்கள் நேற்றும் யாழில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்பில், அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக 21 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ☞ 11



## பதவி விலகியோரின் கடிதம் கிடைக்கவில்லை

### தமிழரசின் செயலாளர் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 10

தமிழரசுக் கட்சியில் இருந்து பதவி விலகியுள்ளனர் என்று குறிப்பிடப்படும் எவருடைய கடிதங்களும் தனக்குக் கிடைக்கவில்லை என்று தமிழரசுக் கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தமிழசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் பதவி விலகல் கடிதம் எதுவும் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை. அதுபோல் சசிகலா மற்றும் தவராசா ஆகியோர் கட்சியில் இருந்து வெளியேறியதாக ஊடகத்தின் வாயிலாகவே அறிய ☞ 11

## மருத்துவர் அர்ச்சுனா பிணையில் விடுவிப்பு

### பிணை நிபந்தனையை மீறமாட்டேன் என நீதிமன்றத்தில் உத்தரவாதம் வழங்கினார்

யாழ்ப்பாணம், ஒக். 10

பிணை நிபந்தனைகளை மீறமாட்டேன் என சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் அர்ச்சுனா உறுதி வழங்கியதைத் தொடர்ந்து அவர் சாவகச்சேரி நீதிமன்றத்தால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் அர்ச்சுனா ☞ 11

## கொழும்பில் போட்டியிடோம்

### பின்வாங்கியது தமிழரசு

வவுனியா, ஒக். 10

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பில் போட்டியிடும் முடிவில் இருந்து தமிழரசுக் கட்சி பின்வாங்கியுள்ளது.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனக்குழு வவுனியாவில் நேற்று ஒன்றுகூடியது. ☞ 11

## சசிகலா மீது தமிழரசு ஒழுக்காற்று நடவடிக்கை

### சத்தியலிங்கம் தெரிவிப்பு!

வவுனியா, ஒக். 10

சசிகலாவுக்கு எதிராக தமிழரசுக் கட்சியால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழரசுக் கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சசிகலா ரவிராஜ்க்கு ☞ 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசியல் மாற்றம்
# பழம்பெரும் கட்சிகள் மாயம் தடுமாறும் அரசியல்வாதிகள்

கொழும்பு, ஒக்.10

**இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் காரணமாக ஏராளமான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். பலர் தமது பழம்பெரும் கட்சிகள், சொந்தச் சின்னங்களை கைவிட்டு மாற்றுச் சின்னங்களில் மக்கள் மத்தியில் செல்லவேண்டிய அவல நிலையும் ஏற்பட்டுள்ளது என்றும் தென்னிலங்கை அரசியல் மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.**

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கு இன்னும் இரண்டு நாள்களே உள்ளன.

இந்நிலையில், ஏராளமான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் அரசியல் அநாதைகளாக மாறியுள்ளனர். பவித்ரா வன்னியாரச்சி, தயாசிறி ஜயசேகர, பேராசிரியர் சரித ஹேரத், ஷான் விஜேலால், எஸ்.எம்.சந்திரசேன மற்றும் பல முன்னாள் பிரமுகர்கள் இந்த நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் தலதா அத்துகோரள, நிமல் லன்சா, பிரசன்ன ரணதுங்க உள்ளிட்டோர் இறுதி நேரத்தில் என்ன முடிவெடுப்பதென தடுமாற்றத்திலுள்ளனர்.

அதேவேளை எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடப்போவதில்லை என சுமார் 60 முன்னாள் அரசியல்வாதிகள் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த காலங்களில் மக்களை ஏமாற்றி ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் இன்று மக்கள் முன்னிலையில் செல்ல முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ச-இ)

# நிலைகுலையும் சஜித்தின் அணி

கொழும்பு, ஒக்.10

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள இன்னும் குறிப்பிட்ட சில தினங்களே உள்ள நிலையில் சஜித் பிரேமதாஸ மற்றும் ரணில் தரப்பில் இருந்த முன்னாள் உறுப்பினர்கள் சிலர் இம்முறை போட்டியிடப் போவதில்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்த எண்ணிக்கை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியை விட குறைவாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினுள் புதிதாக ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் தொடர்பில் ஆலோசனை செய்து இறுதி தருணத்தில் வேட்புமனுக்களை மீளப்பெற அவர்கள் தயாராக உள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் ரணில் தரப்பில் தேர்தலுக்கு முன்னிலையாக தயார் நிலையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன, ஆஷு மாரசிங்க, அகில விராஜ் காரியவசம் ஆகியோர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-இ)



# யானையில் இ.தொ.கா.

கொழும்பு, ஒக்.10

எதிர்வரும் பொதுத்தேர்தலில் யானை சின்னத்தில் போட்டியிட முடிவு செய்துள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இ.தொ.கா.வின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் ப.சக்திவேல் ஆகியோர் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர். அதேவேளை, கட்சியின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குத்தெரிவுசெய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் கூட்டணியின் சிலிண்டர் சின்னத்தின் கீழ் போட்டியிடவும் இ.தொ.கா. தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# தேசிய மக்கள் சக்திக்கு வாசுவின் கட்சி ஆதரவு

கொழும்பு, ஒக்.10

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி எதிர்வரும் பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வாசுதேவ நாணயக்கார இதனைத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் தேர்தலில் போட்டியிடும் அதேவேளை தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்போம். ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# 246 சுயேச்சைக் குழுக்கள் தேர்தலுக்கு கட்டுப்பணம்

கொழும்பு, ஒக்.10

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்காக இதுவரை 246 சுயேச்சை குழுக்கள் கட்டுப்பணங்களை செலுத்தியுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலுக்காக இதுவரை 33 வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட 17 அரசியல் கட்சிகளும், 16 சுயேச்சை குழுக்களும் இதுவரை வேட்பு மனுக்களைக் கையளித்துள்ளன. (ச-இ)

# புதிய அரசமைப்பு அவசியமற்றதாம்
## கூறுகிறார் ரொஷான்

கொழும்பு, ஒக்.10

நடைமுறையில் உள்ள அரசமைப்பைத் திருத்தம் செய்ய வேண்டுமே தவிர அடிப்படைவாத நோக்கமுடைய புலம்பெயரிகளின் நோக்கத்துக்கு அமைய புதிய அரசமைப்பை இயற்றக்கூடாது.

-இவ்வாறு மவ்பிம ஜனதாக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் அவசியமற்றது. ஊழலுக்கு எதிர்ப்பதாக குறிப்பிடுபவர்கள் பேச்சளவில் மாத்திரமே செயற்பட்டுள்ளார்கள். நாங்கள் செயலளவில் ஊழலை எதிர்த்துள்ளோம்.

தேசியத்தை முன்னிலைப்படுத்தியே நாம் செயற்படுவோம். எக்காரணிகளுக்காகவும் தேசியத்தையும், தேசிய உற்பத்திகளையும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# லக்ஷ்மன் கிரியெல்ல ஓய்வு

கொழும்பு, ஒக்.10

76 வயதாகும் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற மூத்த முன்னாள் உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தனது 36 ஆண்டு கால நாடாளுமன்ற வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். அந்தவகையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என அவர் அறிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே கிரியெல்ல, பல தசாப்தகால அரசியல் சேவையின் பின்னர் ஓய்வெடுக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ச)

# ஜனநாயக இடதுசாரி முன்னணி வன்னி மாவட்டத்தில் வேட்புமனு

வவுனியா, ஒக்.10

எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் வன்னித்தேர்தல் மாவட்டத்தில் தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய இருகட்சிகளும் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றது.

அதற்கமைய வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் நேற்றுப் புதன்கிழமை வேட்புமனுவை தாக்கல் செய்தது. இதன்போது வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (ச-இ)

# பொதுத்தேர்தலில் நடிகை தமிதா

கொழும்பு, ஒக்.10

பிரபல நடிகை தமிதா அபேரத்ன பொதுத்தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடவுள்ளார். இது தொடர்பான ஆவணங்களில் நேற்றுமுன்தினம் அவர் கையெழுத்திட்டார்.

துன்பப்படும் மக்களுக்காக சில பணிகளைச் செய்யவே அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரைக் கோபுர உயிரிழப்பு கல்வியமைச்சு தலையீடு

கொழும்பு, ஒக்.10

**கொழும்பு தாமரைக் கோபுரத்தில் இருந்து வீழ்ந்து உயிரிழந்த மாணவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

கடந்த திங்கட்கிழமை 15 வயதான பாடசாலை மாணவியொருவர் தாமரைக் கோபுரத்தின் 29 ஆவது தளத்திலிருந்து வீழ்ந்து உயிரை மாய்த்த தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய மாணவி கல்வி பயின்ற கொழும்பு சர்வதேச பாடசாலையில் விளக்கம் கோரவுள்ள தாக, அமைச்சின் செயலாளர் ஜே.எம்.திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணையை மூன்று மேலதிக செயலாளர்கள் மற்றும் இரண்டு பணிப்பாளர்கள் அடங்கிய குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர் என் றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை மூன்று மாதங்களுக்கு முன்னர் கொம்பனித்தெருவிலுள்ள கட்டடம் ஒன்றில் இருந்து பாய்ந்து இரண்டு மாணவர்கள் உயிரை மாய்த்திருந்தனர்.

அவர்களின் நெருங்கிய நண்பியான 15 வயதான குறித்த மாணவி கடுமையான மன அழுத்தத் துக்கு உள்ளாகி இருந்தார் என அவரின் தந்தை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தபால்மூல வாக்களிப்பு
## விண்ணப்பகாலம் இன்றுடன் நிறைவு




கொழும்பு, ஒக்.10

தபால்மூல வாக்களிப்புக்கான விண் ணப்பம் இன்று வியாழக்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை தபாலில் அனுப் பாது நேரில் சென்று மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திடம் ஒப்படைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பொதுத்தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக்கான விண் ணப்பத் திகதி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு டன் நிறைவடையவிருந்த நிலையில், தபால் விநியோகத்தில் ஏற்படக்கூடிய தாமதம் மற்றும் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை நள்ளிரவுக்கு முன்னர் விண்ணப்பங்களை உரிய மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலகங்களுக்கு ஒப்படைக்கவேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ச-இ)

## எம்.பி.க்களின் முத்திரைகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.10

நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து முத்திரைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, வழங்கப்பட் டுள்ள அனைத்து முத்திரை களையும் நாடாளுமன றத் தபால் அலுவலகத்தி டம் ஒப்படைக்குமாறு தபால் திணைக்களம் தெரிவித் துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்காக வருடத்துக்குப் பத்தாயிரம் முத்திரைகள் வழங்கப்படுவதுடன் இவற் றுக்காக 5 லட்சம் ரூபா செல விடப்படுவதாகவும் தபால் திணைக்களம் தெரிவித்துள் ளது. (ச-66-சி-6)

## ரூ. 1,350 ஊதியம் இன்று முதல்



கொழும்பு, ஒக்.10

பெருந்தோட்டத் தொழிலாளர்க ளின் நீண்டகால கோரிக்கையான நாளாந்த குறைந்தபட்ச சம்பள மான 1,350 ரூபாவையும் அறுவ டைக்கான மேலதிக கொடுப்பன வாக 50 ரூபாவையும் இன்று 10ஆம் திகதி முதல் வழங்க உள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் தோட்டக் கம்பனிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சம்ப ளச் சபை ஆகியவற்றுக்கு இடை யில் அண்மையில் நடைபெற்ற பேச்சின் பின்னர், உடன்படிக்கை ஒன்றுமுடிவுக்கு வந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (ச-இ)



## மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.10

பலத்த மின்னல் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, வடக்கு, மேற்கு, தெற்கு, மத்திய, சப்ரகமுவ, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் அநுராதபுரம் மாவட்டத்திலும் இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழையுடன் பலத்த மின் னலுக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய விபத்துகளை குறைப்ப தற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களிடம் கோரிக்கை விடுத் துள்ளது. (ச-இ)

## கைதிகள் தப்பியோட்டம் அதிகாரிகள் பணிநீக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.10

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த 4 கைதிகள் தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள் ளனர். சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் காமினி திஸாநா யக்க இந்த விடயத்தைத் தெரிவித்தார். அவர்களில் மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் தலை மறைவாகியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (ச-இ)




**மாரிமழை தொடங்கிட்டுது. மழை பெய்யத் தொடங்கினா எல்லா இடமும் காளான்கள் முளைக்கிறது வழமை. ஆனால் இந்த மாரிக்கு காளான்களுக்கே போட்டி விடுறமாதிரி சுயேச்சைக் குழுக்கள் எலக்சன்மழையில முளைச்சிருக்குதுகள். அதுவும் யாழ்ப்பாணம் தான் இந்தமுறை சுயேச்சைகளின்ர சொர்க்கபுரியா மாறிட்டுது. இதுவரைக்கும் 20க்கும் மேல சுயேச்சைக்குழுக்கள் கட்டுக்காசு கட்டியிருக்கினமாம். இந்தச் சுயேச்சைக் குழுக்களில கனக்க பெரிய கட்சிகளின்ர பினாமியள் தான். தங்கட எதிர்க்கன்னையின்ர வாக்கை உடைக்கிறதுக்காக இப்பிடி சுயேச்சையளை இறக்கி குழப்பிறது பெரிய கட்சிகளின்ர ஸ்ரைல். மஹிந்தவின்ர அப்பத்தை தின்டுபோட்டு மைத்திரி அவரை எதிர்த்து எலக்சன் கேக்கேக்க, மைத்திரி எண்டு பேருள்ள ரண்டு மூண்டு பேரை சுயேச் சையா இறக்கி சனத்தை குழப்பினது கனபேருக்கு நினைவிருக்கும். அப்பிடியான விளையாட்டுகள் இந்தமுறையும் நடக்கப்போகுது.**

**முக்கியமா கிளிநொச்சியில ஒரு முன்னாள் எம்.பி. யின்ர வாக்கை உடைக்கிறதுக்காகவும் ஒரு சுயேச்சைக்குழு இறங்கியிருக்காம். பொதுவா ஒரு கட்சிக்கு எதிரா இன்னொரு கட்சிதானே இப்பிடி சுயேச்சையை இறக்கிறது. ஆனால் இது அதே கட்சியின்ர ஒரு கன்னைதான் இப்பிடி அந்த முன்னாள் எம்.பி.யின்ரவாக்கை உடைக்கிறதுக்காக அந்த சுயேச்சையை இறக்கியிருக்குதாம். எண்டாலும் அந்த சுயேச்சையில இருக்கிறவை உள்ளூராட்சி எலக்சனிலையே பத்து, பதினைஞ்சு வோட் தான் எடுக்கிறவை. அதால பெரியளவில வோட்டை உடைக்கேலாது எண்டும் சனங்கள் சொல்லுகினம்.**

**அதைவிட, இன்னொரு நோக்கத்தோடையும் இந்தமுறைசில சுயேச்சைக்குழுக்கள் இறங்கியிருக் குது. அவையின்ர நோக்கம் கனடா, லண்டனுக்கு போறதாம். வெளிநாடுகளுக்குப் போறதுக்கும் இப்பிடி சுயேச்சைக் குழுக்களில இறங்கிறதுக்கும் என்ன சம்பந்தம் எண்டு நீங்கள் யோசிப்பியள். சம்பந்தம் இருக்கு. இப்பிடி சுயேச்சையா நிண்டா அவையின்ர பேர் எல்லாம் வர்த்தமானியில வரும். ஏஜென்சி மூலமா வெளிநாட்டுக்குப் போய், 'நாங்கள் எலக்சன் கேட்டதால எங்களுக்கு இலங்கையில உயிராபத்து' எண்டு ஆதாரமா இந்த எலக்சன் கேட்ட வர்த்தமானியைக் காட்டினால், அவைக்கு ஈஸியா அரசியல் தஞ்சம் கிடைச்சிடு மாம். அதுக்காகவே இந்தமுறை யாழ்ப்பாணத்தில சில பெடியள் பதினெட்டாயிரம் ரூபாவைக் கட்டி, சுயேச்சையாப் பதிஞ்சிருக்கினமாம். அவைக்கு ஒரு வாக்கு விழாட்டியும் கவலையில்லை, இதை வைச்சு கனடாவுக்குப் பறக்கலாம் எண்ட புளுகத்தில இருக்கினமாம். காத்துள்ள போதே கனடாவுக்குப் போற கதை இதுதான் போல.**



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழா

கிளிநொச்சி, ஒக்.10

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைகளத்தின் அனுசரணையுடன், கிளிநொச்சி மாவட்ட செயலகம், மாவட்ட பண்பாட்டுப் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை திறந்தவெளி அரங்கில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பதில் செயலரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஷ் , இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை அதிபர் சு.சுதாஸ்கரன், திருவையாறு கலைக்குரிசில் நா.யோகேந்திரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலைஞராகவும் பல கலைப்படைப்புகளை ஆற்றி மறைந்த பூநகரி இரணைமாதாநகர் பகுதியைச் சேர்ந்த அமரர் கலைநகரி சந்தியா புவனேந்திரனை நினைவுறுத்தும் வகையில் அமைக்கப்பட்ட அரங்கில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ச-25, 27)

# வன்னி, மலையகத்துக்கு சந்நிதியான் உதவிக்கரம்



யாழ்ப்பாணம், ஒக்.10

வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் மலையகம் பண்டாரவளை அயிஸ்லெபி தமிழ் வித்தியாலய மாணவர்களின் தேசிய மட்ட நாடக, நாட்டியப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான நிதிச் செலவுகளுக்காக 50 ஆயிரம் ரூபாவும், சௌதம் தமிழ் மகா வித்தியாலய வாணி விழா நிகழ்வின் அன்னதானச் செலவுக்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் பாடசாலை நிர்வாகத்தினரிடம் வழங்கிவைக்கப்பட்டன.

அதேவேளை வவுனியா நெடுங்கேணி பெரியகுளம் பிள்ளையார் ஆலய மீள் கட்டுமானப் பணிக்காக ஒரு இலட்சம் ரூபா நிதியும் கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கிவைத்தனர். (ச-25,27-66)

# மயான அபிவிருத்தி கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.10

மட்டுவில் நெணியன் பொதுமயானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுற்றுமதில் மற்றும் கிணறு ஆகியவற்றை பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மயான அபிவிருத்திச்சபை தலைவர் செ.ராம்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த வே.மயில்வாகனம், வே. அன்பழகன் ஆகியோரின் நினைவாக அவர்களது குடும்பத்தினரால் சுற்றுமதிலும் சி. நவரத்தினம் நினைவாக அமைக்கப்பட்ட கிணறும் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது. (ச-9)



# 8 அடி உயரத்தில் சரஸ்வதி சிலை

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணம் பல்லசுட்டி பகுதியில் புதிதாக அமைக்கப்பெற்ற 8 அடி உயரம் கொண்ட சரஸ்வதி சிலையானது நேற்றுப்புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கதிரமலை யோகேஸ்வரன் என்பவரின் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், பல்லசுட்டி காந்தி ஜீ முன்பள்ளி வளாகத்தில் குறித்த சிலை அமைக்கப்பட்டது.

நவராத்திரி விரதத்தின் சரஸ்வதிக்கான விரதத்தின் ஆரம்ப நாளான நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது. (ச-27)



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மாணவ முதல்வர் செல்வி வி. பிரவீனா தலைமையில் இடம்பெற்றது. ஆசிரியர்கள் நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ச-159)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டத்தின் கீழ் அலுவலகச் சுற்றாடலில் சிரமதானம் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. (ச-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். திடீர் பணவரவு மகிழ்ச்சி தரும். செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனஸ்தாபம் நீங்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகாலட்சுமியை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்ததைவிடவும் குறைவாகத்தான் இருக்கும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். உடல் அசதி உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுவதுடன் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். வார்த்தைகளில் நிதானம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய வேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படும். செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு இழுபறியானாலும் சாதகமாக முடியும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இதுவா மாற்றம்?

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள 51/1 தீர்மானத்தை திட்டவட்டமாக நிராகரிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் 'மாற்றத்துக்கான அரசாங்கம்' அறிவித்திருக்கின்றது. 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சியமைத்த சுதந்திரக் கட்சி அரசாங்கம், ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கம், பொதுஜன பெரமுன அரசாங்கம் ஆகியன தமிழர்களின் விடயங்களில் எந்தத் திசையில் பயணப்பட்டனவோ அதே திசையில் - அதே அச்சில் பயணத்தைத் தொடர்வது என்ற முடிவில் 'மாற்றத்தின் தூதர்' அநுரகுமார தீர்க்கமாயுள்ளார் என்பதைத்தான், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் அடியோடு தூக்கிக் கடாசியமை புலப்படுத்துகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொறுப்பேற்ற நாள்முதல், இலங்கையில் சொல்லிக் கொள்ளும்படியான மாற்றங்கள் - புரட்சிகரமான சிந்தனைகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஓர் இலங்கையர் என்ற ரீதியில் பெருமைப்படக்கூடிய விடயங்களாகவும் அவை அமைந்திருக்கின்றன. ஆனால், தமிழர்கள் என்ற ரீதியில் அநுரவுடைய ஆட்சியிலும் எமக்கு அந்தரப் பிழைப்புத்தான் மிச்சமாகப்போகின்றதா? என்ற சந்தேகங்கள் தற்போது வலுவாகவே எழ ஆரம்பித்திருக்கின்றன. ஊழல் மோசடியும், கறுப்புப் பணமும், நிதிச் சுரண்டலும் இந்த நாட்டின் பெரும் பிரச்சினைகள்தான். அதை ஒருபோதும் மறுப்பதற்கில்லை. ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்கு கிஞ்சித்தும் குறைவில்லாதது இலங்கைத் தீவின் 'இறவாத இனவாதம்'. இன்னும் சொல்லப் போனால், நாட்டின் இன்றைய சீரழிவு நிலைக்கும் - திருவோட்டுத் தரிசனத்துக்கும் முதன்மைக் காரணமே இனவாதமும் அது விதைத்த வினைகளுமே. ஜனாதிபதி அநுர இதை உணராதவரல்லர். ஆதலால், உண்மையில் அவர் மாற்றத்தின் நேசகர் என்றால், தன் மறுசீரமைப்பையும், அதற்கான ஆரம்பப் புள்ளியையும் இனவாதத்தைக் கொன்று புதைத்து அதிலிருந்தே கட்டமைத்திருக்கவேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அத்தகைய மாற்றங்கள் நிகழவேயில்லை. ஒரு வகையில் அது எதிர்பார்த்ததும்தான்.

2019ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு தவிர்த்து நாட்டின் ஏனைய பகுதிகள் கோத்தாபயவை பெருவாரியாக ஆதரித்து அவரை ஜனாதிபதியாக்கின. ஆனால், இரண்டே வருடங்களில் வடக்கு கிழக்கின் தீர்ப்பு என்னவோ, நிலைப்பாடு எதுவோ, அதுவே சரியானது என்பதை காலம் உணர்த்தியது. இப்போதும்கூட ஜனாதிபதி அநுரவால் நாட்டின் இதர பகுதிகளில் வாரிச் சுருட்டிய வாக்குகளை, ஆதரவை, வடக்கு - கிழக்கில் பெறமுடியவில்லை. இலங்கையின் வாக்களிப்பு வரைபடம் கோத்தாபயவுக்கு எப்படி அமைந்ததோ அநுரவுக்கும் அப்படியே அமைந்தது. ஆதலால், தன் கடந்த கால வரலாற்றுத் தவறுகளை இப்போதேனும் சீர்ப்படுத்தி-நேர்ப்படுத்தி இனவாதத்தை தூக்கி எறிந்துவிட்டு, தர்மத்தின் பாதையில் பயணப்படவேண்டியது ஜனாதிபதி அநுரவின் தலையாய கடமையும் பொறுப்புமாகும். இல்லையேல் காலம் அவரைத் தூக்கி எறிந்துவிடும்.




# தேர்தல் கண்காணிப்பு 8 நாடுகள் வருகை



**கொழும்பு, ஒக்.10**

**நாடாளுமன்றத் தேர்தலை கண்காணிப்பதற்காக 8 நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

சார்க் நாடுகள் மற்றும் ரஷ்யாவில் இருந்து கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வருவதாக ஆர். எம். ஏ. எல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். அதற்கு மேலதிகமாக பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களும் இலங்கைக்கு வருகை தந்து பொதுத்தேர்தல் நடவடிக்கைகளை அவதானிக்க உள்ளனர்.

மேலும், பொதுத்தேர்தலை கண்காணிக்க ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பார்வையாளர்களும் வர உள்ளனர் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார். (ச-இ)

## ரஞ்சனுடன் டில்ஷான்

கொழும்பு, ஒக்.10

நடிகரும் அரசியல்வாதியுமான ரஞ்சன் ராமநாயக்கவின் தலைமையில் புதிய அரசியல் கட்சி ஒன்று இன்றையதினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் கிரிக்கெட் வீரர் டில்ஷான் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் வேட்பாளர்களாக, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வடிவேல் சுரேஷ் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், முன்னாள் கிரிக்கெட் வீரர் திலகரத்ன டில்ஷானும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## ஊசி மருந்துக் குப்பிகள் ரூ.97 மில்லியன் நட்டம்

கொழும்பு, ஒக்.10

கடந்த வருடம் மருத்துவ விநியோகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஊசி மருந்துக் குப்பிகள் கொள்வனவினூடாக, அரசாங்கத்துக்கு 97 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். (ச-இ)

## சஷி வழக்கு அழைப்பு

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸவுக்கு எதிரான போலி கடவுச்சீட்டு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ச)

## பன்றி இறைச்சி அவதானம்

மேல் மாகாணத்தில் பன்றிப் பண்ணைகள் சிலவற்றில் வேகமாக வைரஸ் தொற்று பரவி வருகின்றது என்றும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இறக்கும் பன்றிகளின் இறைச்சி விற்பனை செய்யப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

**நாளை**

**11.10.2024**

வெள்ளிக்கிழமை - புரட்டாதி - 25

சுபநேரம் : 06.02- 07.32

ராகுகாலம் : 10.32 - 12.02

**நாளொரு நல்வார்த்தை**

**அறிவை நோக்கி தொடர்ந்து செல்லும் பாதையே, வெற்றிக்கான வழி.**

- நெப்போலியன் ஹில்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 26.08.1956 மறைவு 12.09.2024

கடந்த 12.09.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர் செல்வராணி குமாரசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.10.2024) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (12.10.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலு வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர் 077 735 1553

(CS/56412) J-1



**DISTRICT SECRETARIAT, JAFFNA**
**INVITATION FOR BIDS (IFB-04)**

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by IFB 05 for Procurement of Goods. Please see the above mentioned Invitation for Bids (IFB-05) in Daily News, Thinakaran & Dinamina dated 09.10.2024 or on Jaffna District Secretariat website www.jaffna.dist.gov.lk

Chairman,
Department Procurement Committee,
District Secretariat, Jaffna

(CR/43386) J-1



அமரர் சிவப்பிரகாசம் தங்கம்மா அவர்களின் 22ம் ஆண்டு நினைவை முன்னிட்டு நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

**மாபெரும் விளையாட்டு நிகழ்வு**

காலம் - 12.10.2024 சனிக்கிழமை மற்றும் 13.10.2024 ஞாயிற்றுக்கிழமை

இடம் - நிலாவரைச்சந்தி

இரண்டு நாட்கள் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறும்.

- **துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி 12.10.2024**

உள்ளூர் - காலை 6.00 மணி
வெளியூர் - காலை 9.00 மணி



1ம் பரிசு துவிச்சக்கரவண்டி மற்றும் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

- **மரதன் ஓட்டப்போட்டி 13.10.2024**

உள்ளூர், வெளியூர்
காலை - 6.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம்

077 911 6049

(CS/56411) J-1


# விளையாட்டு விழா பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 10

கோப்பாய்ப் பிரதேச செயலக விளையாட்டுப் பேரவையும் கோப்பாய்ப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தத் திட்டமிட்ட கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது.

புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த விளையாட்டு விழா அசாதாரண காலநிலையால் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம66)

# கந்தரோடையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 10

வலிகாமம் தெற்குப் பிரதேசசபை அடுத்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முன்மொழிவுகளைத் தெரிவு செய்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கந்தரோடை சமூகநலன்புரி நிலையத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம66)


## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 06 . 1934 மறைவு 08 . 10 . 2024

**சுப்பிரமணியம் அன்னபூரணம்**

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அன்னபூரணம் நேற்றுமுன்தினம் (08.10.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்புத் துணைவியும், அனுசியா, காந்திமதி, இந்துமதி (ஓய்வு ஆசிரியை), சுதமதி (ஓய்வு ஆசிரியை), சுமதி (சுவிஸ்), மகேசன், நிர்மலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மருமக்களின் அன்பு மாமியாரும், பேரப்பிள்ளைகளின் அன்புப் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.10.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 344 3668

(cr.43384) N-1



## 10வது ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 14.11.1954 மறைவு 02.10.2014

அமரர் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்
(முன்னாள் கண்டி ஸ்டோர் நடத்துநர்)
பலாலி கிழக்கு அம்மன் கோயிலடி

திதி : பூர்வபக்க அட்டமி

ஆண்டுகள் பல கடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை என்றும் விட்டு மறையாது அப்பா
உங்கள் அன்போடும் அரவணைப்போடும் நீங்கள்
காட்டிய பாதையிலே எங்கள்
வாழ்க்கை தொடரும் அப்பா
என்றும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

மனைவி
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS/56361) J-1


# காலி சிறையில் 52கைபேசிகள் மீட்பு

சிறைச்சாலையின் இரண்டு கைதிகளின் அறைகளில் இருந்து 52 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சார்ஜர்கள், டேட்டா கேபிள்கள் உள்ளிட்ட பல பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக காலி சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிறைச்சாலைப் புலனாய்வுப் பிரிவின் அவசர பதில் தந்திரோபாயப் பிரிவினரால் மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
## கேள்வி அறிவித்தல் - 2025 (01.01.2025 - 31.12.2025)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 10.10.2024 – 28.10.2024 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 29.10.2024 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 29.10.2024 .மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
   அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 29.10.2024 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6. பண்ணைப்பகுதியில் அமைந்துள்ள இல 01 தொடக்கம் இல 10 வரையான இறைச்சிக்கடைகளுக்கு 2025 ம் ஆண்டு புனரமைப்பு செய்யவேண்டிய தேவை ஏற்படும் பட்சத்தில் மாநகரசபையால் அடையாளப்படுத்தும் மாற்று இடத்துக்கு இடமாற்றம் செய்யப்படும்.
7. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகளை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

| இல | இறைச்சிக்கடை,கருவாட்டுக்கடை பல்பொருள் வாணிபக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 643,650.00 |
| 2 | பண்ணை, கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 57,100.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 638,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 637,000.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 510,000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 515,000.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 810,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 120,000.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 1,062,000.00 |
| 11 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 140,000.00 |
| 12 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 385,000.00 |
| 13 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 519,000.00 |
| 14 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 510,900.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 589,735.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 1,001,150.00 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 705,887.02 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 624,234.98 |
| 19 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 433,950.00 |
| 20 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,051,320.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 712,200.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 325,000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 25 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 26 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 27 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.45 |
| 28 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 29 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 30 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 510,000.00 |
| 31 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 51,100.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.01 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 434,355.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 37 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,100.00 |
| 38 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 512,000.00 |
| 39 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 330,000.00 |
| 40 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 2,255,000.00 |
| 41 | பண்ணை மீன் சந்தை | | 10,000.00 | 8,588,280.00 |
| 42 | குருநகர் மீன் சந்தை | | 10,000.00 | 9,001,001.00 |
| 43 | செங்குந்தா சந்தை | | 10,000.00 | 5,060,000.00 |
| 44 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 668,000.00 |
| 45 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 90,000.00 |
| 46 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 405,001.00 |
| 47 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் சந்தை | | 2,000.00 | 6,564.56 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர்.**
**மாநகர சபை . யாழ்ப்பாணம்.**

(CR/43385) J-1



### பதில் மாவட்ட செயலர் விசேட தரத்துக்கு பதவியுயர்வு

யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம்பிரதீபன்நிர்வாகசேவையின் விசேட தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார். பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட இலங்கை நிர்வாகசேவையின் விசேட தரத்துக்கான நேர்முகத் தேர்வில் அவர் தோற்றியிருந்த நிலையில் பொதுச்சேவைகள் ஆணைக் குழுவினால் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ச-66,9)



### சுண்டுக்குளி மகளிரில் ஆசிரியர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் ஆசிரியர் தின விழா கடந்த திங்கட்கிழமை கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவி திருமதி காயத்திரி குமரன் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் கல்லூரியில் 25 வருடங்கள் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய ஐந்து ஆசிரியர்கள் வெள்ளி விழா ஆண்டுக்கான தங்கப் பதக்கங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (ச-66)

### யூனுஸின் ஆட்சியில்
### இந்துப்பெண்கள் மீது வன்முறை அதிகரிப்பு

பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர், நோபல் பரிசு பெற்ற ஆட்சியாளர் யூனுஸின் ஆட்சியில் இஸ்லாம் தவிர்ந்த ஏனைய மதத்தவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இந்துப்பெண்களை ஹிஜாப் அணியுமாறு இஸ்லாமிய இளைஞர்கள் பலவந்தப்படுத்தி பொது இடங்களில் வைத்து ஹிஜாப் அணிவிக்கும் காணொலிகள் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன. பங்களாதேஷிலுள்ள சிறுபான்மையினரை காப்பாற்றுமாறு பங்களாதேஷ் பிக்குகள் சிலர் அண்மையில் கொழும்பிலுள்ள ஐ.நா. தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்

ஆசிரியர் சேவையில் 35 வருடங்கள் அளப்பரிய சேவையாற்றி 10.10.2024 இல்
தனது அறுபதாவது வயதில் மணிவிழாக்காணும் எமது தாயார்

**திருமதி நிர்மலாதேவி அருமைநாதன்**

**பிரதீபா பிரபா - 2015**

**(இலங்கை ஆசிரியர் சேவை தரம் - 1 பயிற்றப்பட்ட ஆசிரியர் - சித்திரம்)**

**அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.**




***சேவை விபரம்.***

- 27.03.1990 - 31.01.1999 - யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்
- 01.02.1999 - 23.01.2006 - யா/ இராமநாதன் கல்லூரி.
  யா/ இணுவில் இந்துக் கல்லூரி
- 24.01.2006 - 23.05.2011 - யா/ இராமநாதன் கல்லூரி.
- 24.05.2011 - 01.08.2013 - யா/ இராமநாதன் கல்லூரி.
  யா/ குளமங்கால் றோ.க.வித்தியாலயம்
- 02.08.2013 - 11.03.2019 - யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயம்.
  யா/ குளமங்கால் றோ.க.வித்தியாலயம்
- 12.03.2019 - 09.10.2024 - யா/ குளமங்கால் றோ.க.வித்தியாலயம்

தாயென்று தான் நினைந்த மாத்திரத்தில் தானன்று
தன் வயிற்றில் தான் சுமந்து எங்களைத்தான் பெற்றவளே
நாமிருவர் ஆளாக நேர் வழி காட்டிடும் ஓரவதாரமே.
தாயவள் வாழ்கவே அகவை அறுபதில் சேவைக்கு ஓய்வுண்டு
ஆகினும் ஓய்வின்றி அயராதுழைப்பது நீரென்றறிந்த எம்
வாழ்த்துரை கேட்டுநீர் வாழ்க பல்லாண்டு நீர்
வாழ்த்தும் உம் மக்கள் நாம்.

**தாய், தந்தை இல்லம்**
**இணுவில் மேற்கு, இணுவில்.**
**077 921 5922**

வாழ்த்துவோர்:
**மகள் - அ. ஆகண்யா**
**மகன் - அ. சண்முகப்பிரியன்**

(CS/56400) J-1

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை மு / மல்லாவி மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை)
**2023 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில்உயர் பெறுபேறுகளைப்பெற்று**
**சாதனை படைத்த மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும், உதவி நல்கியவர்களையும்**
**பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்**




| மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|
| கம்சனா றமேஷ் | 9A |
| டிலாஜினி கஜேந்திரன் | 9A |
| சரண்ஜா கிருஸ்ணரூபன் | 9A |
| கனிமொழி ஜெயக்குமார் | 9A |
| சிவபாலேந்திரன் யதுசிகன் | 8AB |
| றஜிந்தன் கினோஜன் | 8AB |
| சிவாகரன் சயித் | 8AB |
| யாழிசை நடேஸ்வரன் | 8AC |
| தர்மிகா பாஸ்கரன் | 8AS |
| யசிதா றமேஸ் | 8AS |
| இசைவிழி தயாளன் | 8AS |
| சிவகுமார் சிவானுஜன் | 7A2B |
| கோணேஸ்வரன் சாதுர்ஜன் | 7A2B |
| கோபிகா விஜிதரன் | 7A2B |
| சங்கனி காந்தன் | 7A2B |
| பரணிகா கிருஸ்ணகாந்தா | 7ABC |
| சுதாகரன் ரஜீவன் | 7ABC |
| மதிநிலா சிவானந்தராசா | 7ABC |

வாழ்த்துவோர்:
**பழைய மாணவர் (தாய்ச்) சங்கம்,**
**மு/ மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாவது ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
19 . 09 . 1985

மறைவு
01 . 10 . 2014

### அமரர் சிவராசா நிசாந்த்

திதி : புரட்டாதி மாத வளர்பிறை சப்தமி
(10.10.2024)


ஆண்டுகள் பத்து ஆனாலும்
அழியவில்லை எம் சோகம்
வாழ்க்கை என்னும் வசந்தகாலம்
வரும்போதே எம்மைத் துடிக்கவிட்டு
கணப்பொழுதில் சென்றது ஏன்

வாழ்ந்த கதை முடியுமுன்னே நீ
வாழாமல் மாய்ந்ததேனடா
நூறாண்டு போனாலும் உன்
நிலவுமுகம் தேயாதடா

உன் நினைவுகள் தரும் கண்ணீர்
இவ்வுலகில் நாம் வாழும்வரை வற்றிப்போகாது
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(CS/1541) J-1 **குடும்பத்தினர்**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13 . 06 . 1960

மறைவு
13 . 10 . 2021

### அமரர் சண்முகம் கனகரத்தினம்

திதி : புரட்டாதி வளர்பிறை அட்டமி (10.10.2024)

ஆண்டுகள் மூன்றாகியும்
ஆறவில்லை எங்கள் சோகம்
நீங்கள் எம்மை விட்டு நீங்கினாலும்
நீங்காத உங்கள் நினைவுகள்
எம்மோடு நின்று என்றென்றும் எம்மை வழிநடத்தும்
என்றும் உங்கள் நினைவுகளோடு
ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

செருக்கல் பிள்ளையார் வீதி,
சாவகச்சேரி.

(CS/56409) J-1 **குடும்பத்தினர்.**

## இவ் உலகில் எமக்கு கிடைத்த மிகப் பெரிய பொக்கிஷம் எமது தாய் தந்தையர்

### 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07 . 06 . 1928

மறைவு
02 . 01 . 2011

**முருகேசபிள்ளை நாகலிங்கம்**

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11 . 12 . 1940

மறைவு
22 . 10 . 2023

**நாகலிங்கம் குணமணி**

அன்புக்கு அன்பான உயிரின் உறவாக
உள்ளத்தின் வெளிச்சமாக ஆனந்தம் தரும் விளக்கமாக
எம்மை எல்லாம் காத்து எமக்கு வழிகாட்டியாக
துணையாக என்றும் எம்மோடு இருந்து எமக்குள்
நீங்கா இடம் பிடித்து எம்மை நல்வழிப்படுத்திய
எமது இரு கண்கள் இரு முத்துக்கள் - எமது தாய் தந்தையர்

திருநீலகண்ட வெள்ளை மாவடி பிள்ளையார் கோவிலடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

என்றும் நீங்கா நினைவில்
அன்பு மகள்
தனுஷா வைந்தன்

(22728) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதுஜன பெரமுன சார்பில் கீதநாத் காசிலிங்கம் போட்டி

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச முன்னிலையில் கீதநாத் காசிலிங்கம் நேற்றுக் கையொப்பமிட்டார். (ம-20)


## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பாலசிங்கம் நடனகுமார் (சிவா)**

திதி: புரட்டாதிமாத பூர்வபட்ச அட்டமி
(10.10.2024)

அன்பிற்காக அன்னையின்
மடியில் சரண்
12.02.1962

ஈழத்துச் சிதம்பர நடராஜன்
திருப்பாதக்கமலங்களில் சரண்
10.10.2005

பத்தொன்பது ஆண்டுகள் பறந்து சென்றாலும்
இந்த பந்தங்கள் உன்னை மறந்து போகாதே...
அன்பே சிவா !!
இங்கு நீ இங்கு இல்லையென்றாலும்

என்றும் உன் நினைவு மறைந்து போகாதே...
நீரில்லாமல் மரம் கூட வளர்ந்தாலும்
நின் நிழலை மறந்து நாம் வாழ இயலாதே...
பிறப்புக்கு இறப்பு உண்டென்றாலும்
பேசும் உன் விம்பம் காலத்தாலும் அழியாதே...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

'துவாரகா'
கதிர்காமசுவாமி கோவிலடி,
காரைநகர்.


உன் அன்புப் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

(CS/56404) J-1



## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை மோகனப்பிரியன்



கோப்பாய் வடக்கு நாவற்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை மோகனப்பிரியன் நேற்று முன்தினம் (08.10.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதபிள்ளை - யோகநாயகி தம்பதியின் அன்பு மகனும் கிரியாழினி, யாதுசன், கபிலாஜினி ஆகியோரின் சகோதரனும் திருமாறன், சுரேஸ் ஆகியோரின் மைத்துனரும் மிதுனஜா, டினுஸ்காந், சயூரி, நக்சயன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனத்திற்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். என்பதை அறியத்தருகின்றோம்.


தகவல்
குடும்பத்தினர்.
077 853 5094

(CS 1584) V-1



## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் சிவகுமார்



அல்வின் வீதி
காரைநகர்.

தோற்றம் 08.09.1970 | மறைவு 09.10.2024

காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் சிவகுமார் அவர்கள் நேற்று (09.10.2024) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லதில் நாளை (11.10.2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
077 495 7402

(CR 42687) V-1



## மரண அறிவித்தல்



### விஜயரத்தினம் செல்வமலர்

கைதடி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் செல்வமலர் நேற்று (09.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி குஞ்சுப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும் சங்கரப்பிள்ளை-வள்ளியம்மை அவர்களின் மருமகளும் பவநிதன் (பிரான்ஸ்), தனுஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுபிதசனா அவர்களின் மாமியாரும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (10.10.2024) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லதில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42387) V-1



## மரண அறிவித்தல்



### மரியதாஸ் வசந்தா

வவுனியாவை பிறப்பிடமாகவும் பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் வசந்தா என்பவர் நேற்று (09.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராசன் லூர்தம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற சவேரிமுத்து-அக்கினேஸ் அவர்களின் அன்பு மருமகளும், சவேரிமுத்து மரியதாசின் பாசமிகு மனைவியும் கமலதாசன், விமலதாசன் பிரகாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தீபா, குமுதினி, ஜெனிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கபிரின், கஜந்தன் எலிசா, செரோணி, மெர்ஸ்சியன், கம்ரிசியன், ஜனுசன், ஜசிஸ், ஜெருசா ஆகியோரின் ஆசை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (11.10.2024) வெள்ளிக்கிழமை அன்று காலை பொலிகண்டியில் உள்ள அவரது மகன் பிரகாஸ் அவர்களின் இல்லத்தில் இறுதிச்சடங்கு நடைபெற்று காலை 10.00 மணிக்கு பொலிகண்டி குழந்தை யேசு ஆலயத்தில் இரங்கல் திருபலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வல்வெட்டித்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
076 679 5998
076 167 5623
077 444 4457
0039 339 186 3927

(CS 1066) V-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாடு கடத்தும் முயற்சி; பொலிஸாரால் முறியடிப்பு

## 20 மாடுகள் மீட்பு; ஒன்று உயிரிழப்பு

கிளிநொச்சி, ஒக். 10
கிளிநொச்சியில் இருந்து சட்டவிரோத
மாக யாழ்ப்பாணத்துக்கு மாடுகள்
கடத்தப்பட்ட நிலையில், இந்தக் கடத்
தலை சாவகச்சேரி பொலிஸார் முறிய
டித்துள்ள னர். மீசாலைப் பகுதியில்
வைத்து மேற்கொண்ட சோதனை
யின்போதே, மேற்படி மாடு கடத்தல்
முறியடிக்கப்பட்டதுடன், லொறி ஒன்
றுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த
20 மாடுகள் மீட்கப்பட்டன. இவற்றில்
ஒன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்
டுள்ளது. நெரிசலால் அந்த மாடு இறந்
திருக்கலாம் என்று பொலிஸார் கருத்
கின்றனர். மேலதிக விசாரணைகள்
இடம்பெற்று வருகின்றன. (அ-ம-20)

## மன்னார்ப்...

மன்னார் நகரப் பகுதியில், முன்னர் இரா
ணுவ முகாம் அமைந்திருந்த பகுதியில்
சதொச நிறுவனக் கட்டுமான நடவடிக்
கைகள் முன்னெடுக்கப்பட்ட வேளையில்
மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.
இதையடுத்து, அந்த இடம் மனிதப் புதை
குழியாக அடையாளப்படுத்தப்பட்டது.
கடந்த சில மாதங்களாக இந்தப் புதைகு
ழியில் எந்தவொரு அகழ்வுப் பணிகளும்
இடம்பெறவில்லை. பணிகள் தற்காலிக
மாக நிறுத்தப்பட்டு புதைகுழி மூடப்பட்டி
ருந்த நிலையில், நேற்றைய தினம் மீண்
டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்
டுள்ளன.
புதைகுழியை ஸ்கான் செய்யும் நடவடிக்
கையும், அகழ்வுக்காக மணலைப் பிரித்
தெடுக்கும் பணிகளும் நேற்றையதினம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-156)

## இலங்கைக்கு...

யில், இலங்கை தொடர்பில் மனித உரி
மைகள் பேரவையில் ஏற்கனவே நிறை
வேற்றப்பட்ட 'இலங்கையில் நல்லிணக்
கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித
உரிமைகளை மேம்படுத்தல்' என்ற
தலைப்பிலான தீர்மானங்கள் நேற்று
வாக்கெடுப்பின்றி மீளவும் நிறைவேற்றப்
பட்டுள்ளன.
ஆனால், இந்தத் தீர்மானத்தை ஏற்கப்
போவதில்லை என்று இலங்கை அரசாங்
கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்
பேரவையில் நேற்றையதினமே திட்டவட்
டமாக அறிவித்துள்ளது.
எந்தவொரு இறைமையுள்ள அரசாலும்
அதன் அரசமைப்புக்கு முரணான மற்
றும் அதன் உள்நாட்டு சட்ட செயன்முறை
களின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே
தீர்மானிக்கும் வெளிப்புறப் பொறி
முறையை கட்டாயமாகத் திணிக்க முயல்
வதை ஏற்றுக்கொள்ளமுடியாது என
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேர
வைக்கான இலங்கையின் நிரந்தர வதி
விடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.
(அ-ம-இ)

## கொழும்பில்...

இதன் பின்னர் நடைபெற்ற ஊடகவிய
லாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்
போதே, இம்முறை கொழும்பில் போட்டி
யிடுவதில்லை என்று தீர்மானித்துள்ள
தாகத் தமிழரசுக் கட்சியின் செயலாளர்
ப.சத்தியலிங்கம் அறிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வன்னியின் மூன்று மாவட்டத்தினதும்
வேட்பாளர் பட்டியல் இறுதிசெய்யப்பட்
டுள்ளது. நாளை காலை (இன்று) இறுதி
விவரம் அறிவிக்கப்படும். அத்துடன்
இதுவரை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட
வேட்பாளர் பட்டியல்களில் மாற்றம் செய்
வதற்கான வாய்ப்புகள் இல்லை. கட்சி
யின் மத்திய குழுவே தேர்தல் நியமனக்
குழுவை நியமித்தது. அந்தக் குழுவா
னது எந்த அடிப்படையில் வேட்பாளர்
களைத் தெரியவேண்டும்என்று தீர்மா
னம் எடுத்ததோ அந்த அடிப்படையில்
நியமனங்களை வழங்கியிருக்கிறது.
இம்முறை தேர்தலில் புதியவர்கள்
அனைத்து மாவட்டத்திலும் உள்வாங்கப்
பட்டுள்ளனர். விண்ணப்பித்த அனைவ
ருக்கும் கொடுக்கமுடியாத துர்பாக்கிய
நிலைமை உள்ளது.
அத்துடன் இம்முறை தேர்தலில் கொழும்
பில் போட்டியிடுவது தொடர்பாகவும் மத்
தியகுழுவில் பேசப்பட்டது. ஆனால்,
தற்போதைய களநிலவரங்களின் அடிப்
படையில் அங்குள்ள ஏனைய தமிழ்க்
கட்சிகளுடன் இணைந்து பணியாற்று
வது தொடர்பாக ஆராய்ந்துள்ளோம்.
அந்த அடிப்படையில் கொழும்பில் இம்
முறை தமிழரசுக்கட்சி போட்டியிடாது
என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது
- என்றார். (அ-ம-110)

## 21 இந்திய...

நான்கு படகுகளில் அவர்கள் அத்துமீறி
நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்
றும், இலங்கைக் கடற்பரப்புக்குள் மிகை
யாக ஊடுருவியிருந்தனர் என்றும்
இலங்கைக் கடற்படையின் செய்திக்
குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கைதுசெய்யப்பட்ட 21 மீனவர்களும்
யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்
படை முகாமுக்குக் கொண்டு செல்லப்
பட்டு, மேலதிக விசாரணைகளின் பின்
னர் சட்ட நடவடிக்கைகளுக்காக நீரியல்
வளத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்
பட்டனர்.
இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்
களை அடாத்தாகக் கைதுசெய்கின்றது
என்றும், இந்தக் கைது நடவடிக்கை
ளைக் கைவிடவேண்டும் என்று வலியு
றுத்தியும் தமிழகம் சென்னையில் உள்ள
இந்தியாவுக்கான இலங்கைத் துணைத்
தூதரகத்தை முற்றுகையிட்டு பாட்டாளி
மக்கள் கட்சி நேற்றுமுன்தினம் போராட்
டங்களை நடத்தியிருந்தது.
இந்தப் போராட்டங்கள் இடம்பெற்று
வெறும் 24 மணிநேரத்துக்கு முன்னாக
தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்
புக்குள் மீண்டும் அத்துமீறியுள்ளமை
குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66-20)

## வடக்கில்...

வடமாகாணம் பதிவாவதற்கு கூடுதல்
சாத்தியங்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்
பட்டுள்ளது.
நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெற
வுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான
கட்டுப்பணத்தை அரசியல் கட்சிகளும்,
சுயேச்சைக் குழுக்களும் தற்போது
செலுத்தி வருகின்றன. நாளைவரை கட்
டுப்பணத்தைச் செலுத்துவதற்கான அவ
காசம் வழங்கப்பட்டுள்ள நிலையில்,
வடமாகாணத்தில் இதுவரை 40க்கும்
மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்ப
ணம் செலுத்தியுள்ளதாகத் தெரியவரு
கின்றது. (அ-ச)

## ரயில்...

சுந்தையா இலங்கேஸ்வரன் (வயது-
58) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்
தவராவார். சடலம் உடற்கூற்றுப் பரிசோ
தனைக்காக யாழ்ப்பாணம் போதனா
மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்
ளது. (அ-ம-27-26)

## மருத்துவர்...

தொலைபேசியில் சக மருத்துவர்களை
அச்சுறுத்தினார் என்றும், சமூக ஊடகங்
களில் அவதூறு ஏற்படுத்தினார் என்றும்
குற்றஞ்சாட்டி சாவகச்சேரி நீதிவான் நீதி
மன்றத்தில் அவருக்கு எதிராக வழக்குத்
தொடரப்பட்டிருந்தது. குறித்த வழக்கில்
மருத்துவர் பிணையில் விடுவிக்கப்பட்
டிருந்தார். எனினும், கடந்த வழக்கு விசா
ரணையின்போது பிணை நிபந்தனை
களை மீறியமை, மருத்துவர்களுக்கு
எதிராகத் தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்
கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தவ
றியமை உள்ளிட்ட காரணங்களால்
பிணை இரத்துச் செய்யப்பட்டு விளக்க
மறியலில் வைக்கப்பட்டார்.
இந்த நிலையில் கடந்த வாரம் அர்ச்சுனா
வின் சட்டத்தரணி நகர்த்தல் பத்திரம்
மூலம் மன்றில் பிணை விண்ணப்பம்
செய்திருந்தார். அதற்கான கட்டளை
இன்று வியாழக்கிழமை வழங்கப்படு
மென மன்று திகதியிட்டிருந்தது. நேற்
றையதினம் மீண்டும் நகர்த்தல் பத்திரம்
மூலம் மன்றில் பிணை விண்ணப்பம்
செய்யப்பட்ட நிலையில் மருத்துவர் அர்ச்
சுனா இனிவரும் காலங்களில் பிணை
நிபந்தனைகளை மீறமாட்டார் என உறுதி
வழங்கியதைத் தொடர்ந்து இரண்டு
ஆள்பிணையில் செல்ல மன்று அனு
மதி வழங்கியுள்ளது.
இதேவேளை, மருத்துவர் அர்ச்சுனா
வுக்கு எதிரான வழக்கு விசாரணைகள்
இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி நீதி
வான் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ள
மையும் குறிப்பிடத்தக்கது.
(அ-ம-26-66-20)

## அதிகாரிகளுக்கு...

கடுமையான தண்டனை வழங்கப்பட
வேண்டும் -இவ்வாறு வடக்கு மாகாண
ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்
துள்ளார்.
வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்
களினதும் மாவட்ட செயலர்கள், பிர
தேச செயலர்கள், வடக்கு மாகாணப்
பிரதம செயலர், மாகாண அமைச்சுக்க
ளின் செயலர்கள், திணைக்களத் தலை
வர்களுடன் நேற்றுமுன்தினம் இடம்
பெற்ற கலந்துரையாடலின்போதே
மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்
டங்களிலும் உள்ள அரச காணி தொடர்
பான மோசடிகள் தொடர்பில் வடக்கு
மாகாண ஆளுநர் சில விடயங்களை
இந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தியுள்
ளார். இவ்வாறு செயற்படுவதை தொடர்ச்
சியாக அனுமதிக்கமுடியாது என்றும்
குறிப்பிட்டுள்ளார்.
அரச காணி தொடர்பான மோசடிகளு
டன் தொடர்புடைய அலுவலர்களுக்கு
இடமாற்றங்களை மாத்திரம் வழங்குவது
தண்டனையாகாது. அவர்களுக்கு அத
னால் பயம் ஏற்படாது. எனவே அதி உச்ச
பட்ச நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்
படவேண்டும். இதன் ஊடாகவே எதிர்கா
லத்தில் அதனைத் தடுக்க முடியும் என்று
ஆளுநர் தெரிவித்தார். (அ-ம-5)

## வறுமையால்...

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
யின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம்
இடம்பெற்றது. இதில் அதிதியாகக் கலந்
துகொண்டு உரையாற்றும்போதே பேரா
சிரியர் வேல்நம்பி இவ்வாறு தெரிவித்
தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாங்கள் மற்றவர்களிடம் இருந்து உத
வியை பெறுவது அவ்வளவு நல்லதல்ல.
என்றாலும்கூட கல்வி கற்கவேண்டும்
என்பதற்காக ஒருவரது உதவியைப்
பெறுவது என்பது எந்த விதத்திலும் தாழ்
வானது கிடையாது. மாறாகக் கல்வி
கற்பதற்கு வறுமையால் இடர்படுகின்ற
மாணவர்களை அடையாளம் கண்டு
அவர்களுக்கு உதவிசெய்வது இந்த
உலகத்தில் இருக்கின்ற உன்னதமான
கருமங்களில் ஒன்றாகவே கருதப்படுகி
றது. ஏனெனில் கல்வியால் எமது சமூ
கம் நிமிர்ந்து நிற்கும். நல்ல ஆளுமை
களை நாங்கள் கண்டு கொள்ளக் கூடி
யதாக இருக்கும்.
'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ப
தற்கு சில அறிஞர்கள் கூறியுள்ள விளக்
கம் 'நல்ல விடயங்கள் பெற்றுக் கொள்ள
வேண்டுமாக இருந்தால் அவரிடம்
சென்று கெஞ்சி மன்றாடி, அவருடைய
காலில் விழுந்தாவது அதனைப் பெற்
றுக் கொள்' என்பதுதான். இதிலே எந்தத்
தாழ்வு மனப்பாங்கும் எமக்கு இருக்க
வேண்டிய தேவை இல்லை - என்றார்.
(அ-ம-27)

## காணிப்...

மாகாணக் காணிப் பிரச்சினைகள்
தொடர்பான விசேட கலந்துரையாடல்
வடமாகாண ஆளுநரின் அலுவலகத்
தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற
போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்
டுள்ளது. காணி மோசடிகள் தொடர்பில்
பரந்துபட்ட விசாரணையொன்றை நடத்
துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
(அ-ம-66)

## பதவி...

முடிகின்றது. அவர்களது கடிதமும் இது
வரை கிடைக்கவில்லை. எனவே இந்த
விடயங்கள் தொடர்பில் நான் கருத்துக்
கூற முடியாது. எனவே, அவ்வாறான
தொரு நிலை ஏற்படுமாக இருந்தால்
கட்சி யாப்பின் பிரகாரம் உரிய நடவ
டிக்கை எடுப்போம் என்றும் தமிழரசுக்
கட்சியின் செயலாளர் மேலும் தெரிவித்
துள்ளார். (அ-ம-110)

## சசிகலா...

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில்
போட்டியிடுவதற்கு இடம் வழங்கப்பட
வில்லை. இதையடுத்து அவர் சங்குச்
சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்து
அது தொடர்பான ஆவணங்களிலும்
கைச்சாத்திட்டுள்ளார்.
இதையடுத்தே, சசிகலா கட்சியில்
இருந்து வெளியேறாத பட்சத்தில் அவ
ருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை
மேற்கொள்ளப்படும் என்று தமிழரசுக் கட்
சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம்
தெரிவித்துள்ளார். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடிவதை ஒழிப்பு நடைமுறை

# பின்பற்றாவிடின் நடவடிக்கை

**கொழும்பு , ஒக். 10**

**அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை ஒழிப்பதற்கான வழிகாட்டல்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது பல்கலைக்கழகங்கள் செயற்படுத்தத்தவறினால், அதனை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் குறித்து நீதிமன்றம் முடிவு செய்யும் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழகங்களில் பகிடி வதையை ஒழிப்பதற்கான வரைபு வழிகாட்டல்களை சட்டமா அதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.அதிகாரிகள்,உயர் கல்வியமைச்சு அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள்,சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து இந்த வரைபு முன்மொழியப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டல்கள் இன்னும் இறுதியாக்கப்படவில்லை. இந்த வரைபு தொடர்பாக தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறு பல்கலைக்கழகங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை தொடர்பான முறைப்பாடுகளுக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பொலிஸார் தொடர்பாக துணைவேந்தர்கள் பொலிஸ்மா அதிபருக்கும் சட்டமா அதிபருக்கும் முறைப்பாடு செய்யலாமென புதிய சட்ட வரைபு கூறுகிறது. வரைபு வழிகாட்டல்கள் பல முக்கியமான நடவடிக்கைகள் மூலம் இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவ ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பாதிக்கப்பட்ட ஆதரவுக் குழுகளை நிறுவுவதற்கு இந்த வரைபில் முன்மொழியப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-6)

# ஆசிரியரின் வீடு, மோட்டார் சைக்கிள் எரிப்புக்கு ஆசிரியர் சங்கம் கண்டனம்

முல்லைத்தீவு, ஒக். 10

முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரின் வீடு மற்றும் அவரது மோட்டார் சைக்கிள் எரியூட்டப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் கடந்த திங்கட்கிழமை மாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவரினால் சீரழிந்து கொண்டிருக்கும் கல்வி வலயங்களில் முல்லைத்தீவுக் கல்வி வலயமும் ஒன்றாகும். முல்லைத்தீவு முள்ளியவளை தேசியப் பாடசாலையின் அதிபரின் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் தொடர்பாக நீண்டகாலங்களாகப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்துள்ள போதிலும், அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காததன் முரண்பட்ட நிலையே இன்று ஆசிரியர் ஒருவரின் சொத்துகளை அழித்து உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

குறித்த அதிபரின் முறைகேடுகள் குறித்துப் பாடசாலை ஆசிரியர்களும், இலங்கை ஆசிரியர் சங்கமும், வலயக் கல்விப் பணிப்பாளர், மத்திய மற்றும் மாகாணக் கல்வியமைச்சுகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்த போதும் நடவடிக்கை எடுக்காதிருந்ததன் விளைவே இந்தப் பாரதூரமான சம்பவத்துக்குப் பிரதான காரணமாகும். இந்த விளைவுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினர் அனைவரும் பொறுப்புக்கூறவேண்டும். இந்தச் சம்பவம் நடைபெறுவதற்குப் பாடசாலை அதிபரின் தொடர்ச்சியான செயற்பாடுகளே பிரதான காரணமாக அமைந்தது. குறித்த பாடசாலையில் அதிபர் ஆசிரியர்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த முரண் நிலைகளின் நியாயமான காரணங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாகவிருந்தால் இத்தகைய சம்பவம் தவிர்க்கப்பட்டிருக்கும் என்பதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும். குறித்த சம்பவம் தொடர்பில், பொலிஸாரும், வடமாகாண ஆளுநரும், திணைகள அதிகாரிகளும் உரிய நீதியை ஆசிரியருக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்பட்டுச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டும். முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியின் அதிபர் உடனடியாக இடமாற்றப்பட்டு அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பதுடன் குறித்த அதிபர் தொடர்பான குற்றச்சாட்டுகளை மூடி மறைக்கத் துணைநின்ற முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

(ஒ-66)

வீடு விற்பனைக்கு
யாழ். வேம்படி வீதியில்
வீடு விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
077 710 9016

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய வாய்ப்புக்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன் துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய தரம் 06 தமிழ்மொழி மூல ஆங்கிலமொழி வகுப்புக்கள் ஆரம்பம்
12.10.2024 [சனிக்கிழமை]
விஜயதசமி நன்னாளில்
நேரம்
மாலை - 3.02 முதல் 4.32 வரை
(ஆரம்பிக்கும் நாள் முதல் ஜனவரி 16 வரை இலவசமாக வகுப்புக்கள் நடைபெறும்.)
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்

கோழி இறைச்சி விற்பனைக்கு
(பொதியிடப்பட்டது)
Coysbro-Chicken

| | | |
|---|---|---|
| ➤ Grand | - | 710 |
| ➤ W/B (Skinless) | - | 925 |
| ➤ Breast | - | 1260 |
| ➤ Whole leg | - | 1150 |
| ➤ Drum stick | - | 1130 |
| ➤ Wings | - | 790 |

Note: மொத்த வியாபாரம் மட்டும்
(CS 1583) V-1
தொடர்பு: 077 153 1167, 077 170 5383

காணி தேவை
பூனகரி, மன்னார்,
கிளிநொச்சி பகுதிகளில் நில
பரப்பு உறுதி காணி
தேவை.
தொடர்புகளுக்கு:
077 374 4652

காணி விற்பனைக்கு
யாழ்பாணம் உரும்பிராயில் 12 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு செல்லத்துரை வீதி முகப்புடன்
➤ குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
➤ உரும்பிராய் சந்தி 750m தூரம்
➤ உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
➤ நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
➤ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
➤ 20 அடி பாதையுடன்
பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00 வரை
தொடர்புகளுக்கு:
077 288 0152, 076 739 0413

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 09 . 1963



மறைவு 08 . 10 . 2024

**சற்குணானந்தஸ்ரீஸ்கந்தராசா மீராதேவி**

(உரிமையாளர் - போட்டோ ஸ்ரீ )

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சற்குணானந்தஸ்ரீஸ்கந்தராசா மீராதேவி (போட்டோ ஸ்ரீ உரிமையாளர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (08.10.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகராஜா - பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சற்குணானந்த ஸ்ரீஸ்கந்தராசாவின் (போட்டோ ஸ்ரீ) பாசமிகு மனைவியும், கிருஷோப்தமா (சுவிஸ்) வக்சலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், லங்காதேவி, ரதிதேவி, கொங்காதேவி, முருகமூர்த்தி, மேனகாதேவி (ஜேர்மன்) காலஞ்சென்ற காஞ்சனாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றெஜேபி(சுவிஸ்), கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமியும், அஷ்வதா, ஹரிஷ், அகர்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.10.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல் :**
**வக்சலன் (மகன்)**
**076 688 9993**

(CS/56407) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.